**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No90/2021

வாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 22.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.1– ஜெகதீசன் த/பெ பெரியசாமி</u>**

**<u>5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கு எதற்காக போட்டுள்ளேன் என்றால் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் பிரச்சனை செய்தார்கள் அதனால் போட்டேன். நான் வழக்கு போட்டுள்ள இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே 732/12 விஸ்தீரணம் 1 1/2 செண்ட் ஆகும். இந்த வழக்கு எனது தந்தை தாக்கல் செய்துள்ளார். எனது அப்பா வழக்கு தாக்கல் செய்ததால் எனக்கு வழக்கு விவரம் தெரியாது என்றால் எனது அப்பா வழக்கு பற்றி சொல்லியுள்ளார். வழக்கு சொத்திற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது அப்பா பெயரில் உள்ள பட்டா, ஆதார் கார்டு, வீட்டுவரிரசீது, குடும்ப அட்டை, EB கட்டண ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்தைப்பற்றி வருவாய்துறையில் என்னை விசாரித்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை அப்பாவை விசாரித்ததார்கள். நாங்கள் வாடகைக்கு இருப்பதாக மனு கொடுத்திருந்தார்கள் நாங்கள் வாடகைக்கு இல்லை அது சொந்த இடமாகும். விசாரணை சம்பந்தமாக ஆவணம் இநத் வழக்கில் தாக்கல் செயதுள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 5 ம் பிரதிவாதி மலையாளன் எங்களது இடத்திற்கு எந்தப்பக்கம் உள்ளார் என்றால் வடக்குப்பக்கம் உள்ளார் இருவருக்கும் இடையில் பெரியசாமி த/பெ காத்தானின் இடம் உள்ளது.

3. தாவா சொத்தில் நான் பிறந்தது முதல் குடியிருந்து வருகிறேன். 5 ம் பிரதிவாதி எங்களிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்களது தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.